மான கர்நாடகாவில் லைப் டாக்ஸ் என்று வசூல் செய்கிறார்கள். அப்படி வசூல் செய்கிறபோது லைப் டாக்சில் டிப்பிரிசியேஷன் போட்டு பழைய வண்டிகளுக்கு கழித்துக்கொண்டு மீதியை வசூல் செய்கிறார்கள். அந்த முறையை தமிழக அரசும் கடை பிடிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான்-டிரான்ஸ்போர்ட் வெகி கிள்ஸ்-ஐ பொறுத்தவரையில், போக்குவரத்துக்கு பயன்படாத வண்டிகள், தனியார் வைத்து இருக்கிற வண்டிகளைப் பொறுத்த வரையில் ஒரே நேரத்தில் அதற்குண்டான வரியை வசூல் செய்யலாமா என்ற ஒரு ஆய்வு இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் டிரான்ஸ்போர்ட் வெகிகளைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட ஒரு முடிவை நாம் எடுக்கமுடியாது. அதை குவார்ட்டருக்கு ஒரு முறையோ, அல்லது ஆண்டுக்கு ஒரு முறையோ வசூல் செய்யவேண்டும் என்று இருக்கிறது. அந்த முறை ஆந்திராவில் இருப்பதால் இங்கே செய்வது என்பதை தனியாக ஆய்வு செய்ய வேண்டும். அதைப்பற்றி குறிப்பான தகவல் என்னிடத்தில் இல்லை. அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

### தஞ்சையில் தென்னை சம்பந்தப்பட்ட தொழில்கள்.

448—(*வினா எண். 9261) திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் தென்னை சம்பந்தப்பட்ட தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், கல்லகம் அன்னைக்காடு என்னும் சிறு கிராமம் மாவட்ட ஆட்சியாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தென்னை சார்ந்த கூட்டுறவு தொழிற் பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1987 ஏப்ரல் 22]

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஓரத்தநாடு தாலுக்கா, பட்டுக் கோட்டை தாலுக்காவில் தென்னை மரங்கள் அதிகமான அளவில் இருக்கின்றன. அதனுடைய மூலப்பொருட்களைக் கொண்டு தென்னை தொழில் ஆரம்பிக்கவேண்டும் என்று கருத்தரங்கு ஒன்று 2 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்து, ஒரு முக்கிய தொழில் ஆரம்பிக்க நம்முடைய அரசுக்கு ஏதாவது செயற்குறிப்பு வந்து இருக்கிறதா? அப்படி வந்திருக்குமானால் விரைவில் அந்தத் தொழிலை தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் பேராவூரணி வட்டத்தில் அதை ஆரம்பிப்பதற்கு ஒரு செயற் குறிப்பு வந்து இப்போது அதற்காக பணம் ஒதுக்கப்பட்டு அந்த வேலை துவங்கப்பட்டு இருக்கிறது. எனவே இதுதவிர வேறு இடத்தில் தொடங்குவதற்கான குறிப்பு எதுவும் அரசிடத்தில் இப்போது இல்லை.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தென்னை உபப் பொருட் களைக் கொண்டு ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பேராவூரணி வட்டத்தில் ஒரு கிராமத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அங்கே ஏறத்தாழ வேதாரண்யத்தி லிருந்து பட்டுக்கோட்டை எல்லை வரையில் கடல் ஓரப் பகுதி முழுவதும் தென்னை 4, 5 வட்டங்களில் நிறைந்து இருக்கிறது. எனவே அதை மையப்படுத்தி பட்டுக்கோட்டை வட்டம் அபிராமப்பட்டினம் பகுதியில் ஒரு தொழில் கூடத்தை துவக்க அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப ஆய்வு செய்துதான் இப்போது நடவடிக்கை எடுத்து இருக் கிறார்கள். இப்போது புதிதாக கேட்கிற இடத்தைப் பொறுத்த வரையில் இன்னும் ஒன்று அவசியமா என்பதைப் பார்த்து

நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியாக இன்னும் ஒன்று தேவையா என்பதைப் பார்த்து, ஆய்வு செய்து பின்னால் சொல்லப்படும்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணி வட்டத்தில் துவங்க இருக்கின்ற அந்தத் தொழில் கூடத்தின் மதிப்பீடு எவ்வளவு? எத்தனை ஆண்டு காலத்தில் அது செயலாக்கத்திற்கு வரும் என்று அறிய விரும்புகிறேன். தென்னையிலிருந்து பேட்டரி செல்லுக்கு தேவையான கார்பனை தயாரிக்க தென்னை கொட்டாங்குச்சியிலிருந்து முடியும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அந்த தொழிற்பேட்டையில் இந்தத் தொழிலும் அடங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 எக்கர் நிலப் பரப்பிலே இதை இப்போது துவக்குகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பங்கு மூலதனமாக அரசாங்கம் ரூ. 5 இலட்சத்தை இதற்காக ஒதுக்கி, 1987—88-ல் ரூ. 1.23 இலட்சத்தை ஒதுக்கி, வேலையை துவங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி வேறு எந்த தகவலும் தற்போது இல்லை.

### புதுக்கோட்டை நகரில் மினி பேருந்து.

449—(*வினா எண். 10367) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் மினி நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மினி பேருந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்குவதற்கான நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.